


■ புதுவையில் நடைபெறும் தென்மண்டல கைப்பந்து போட்டியில் பங்கேற்க செல்லும் தமிழக அணி வீரர்களை விசாலாட்சி பொன்முடி வாழ்த்தினார்.

# தென்மண்டல கைப்பந்து போட்டி வீரர்களுக்கு வழியனுப்பு விழா

**விக்கிரவாண்டி, ஏப்.24–**

விக்கிரவாண்டி சூரியா கல்லூரியில் தென்மண்டலபோட்டியில் பங்கேற்க செல்லும் தமிழக கைப்பந்து வீரர்கள் வழியனுப்பு விழா நடந்தது.

புதுவையில் இன்று முதல் வரும் 29 ம்தேதி வரை தென்மண்டல அளவி லான கைப்பந்து விளையாட்டு போட்டி நடைபெறுகிறது. போட்டியில் புதுவை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களை சேர்ந்த கைப்பந்து அணிகள் பங்கேற்க உள்ளன.

விக்கிரவாண்டி சூரியா கல்லூரியில், தமிழகத்தின் சார்பில் போட்டியில் பங் கேற்க தமிழ்நாடு கைப்பந்து கழகத்தின் மூலம் கடந்த 19ம் தேதி முதல் நேற்று 23 ம் தேதி வரை அணியில் பங்கேற்க உள்ள ஆண், பெண் வீரர்கள் தேர்வு செய் யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது நேற்று தேர்வு செய்யப்பட்ட தமிழக அணி வீரர்கள் போட்டியில் பங்கேற்க வழியனுப்பு விழா நடந்தது.

விழாவிற்கு கல்லூரி சேர்மன் டாக்டர் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார். செயலாளர் டாக்டர் அசோக் சிகாமணி முன்னிலை வகித்தார். மாவட்ட கைப் பந்து கழக ஒருங்கிணைப்பாளர் மணி வரவேற்றார் .

கல்லூரி நிர்வாகி விசாலாட்சி பொன் முடி கலந்து கொண்டு தமிழக அணியை சேர்ந்த ஆண்,பெண் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்தி பேசினார்.

உடற்கல்வி இயக்குனர் சீனுவாசன், உடற்பயிற்சி அலுவலர்கள் அருண், சிவகாமி, ஒருங்கிணைப்பாளர் சந்தான கிருஷ்ணன் உட்பட தேர்வான ஆண், பெண் வீரர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட செயலாளர் காளிதாஸ் நன்றி கூறினார் .